***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***STC.No.1183/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | ரமேஷ் |
| *Father/Husband's Name* | துரைசாமி |
| *Village* | உம்பளச்சேரி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 45 |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். TNSTC ல் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும்.

கடந்த 6 மாதத்திற்கு முன்பு தடம் எண்.480 ல் TN 68 ல 816 அரசு பேருந்தை மன்னார்குடியில் இருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் ரோட்டில் மாலை 06.30 மணியளவில் வெங்கத்தான்குடி என்ற இடத்தில் பேருந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி பிரவீன்ராஜ் நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் இருச்சக்கர வாகனத்தில் பேருந்தின் எதிரே மோதும்படி வந்து அவருடைய இருச்சக்கர வாகனத்தை நிறுத்தினார். ஹாரன் அடித்து வரமுடியாதா என்று கூறி என்னை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று கூறி அசிங்கமாக திட்டினார். பின்னர் பஸ்ஸை விட்டு இறங்கிய என்னை தலையிலும், கழுத்திலும் கைகளால் தாக்கினார். மேலும், இந்த ரூட்டில் வந்தால் உன்னை காலி செய்து விடுவேன் என்று மிரட்டல் விடுத்தார். நான் வந்த பேருந்தில் சுமார் 50, 60 பேர் வந்தார்கள். அதில் கீர்த்தி, இந்திரா, மைதிலி, பாஸ்கர், டேவிட் ஆகியோர்கள் இருந்தனர். சம்பவத்தை பார்த்தனர். அன்றையதினமே பேருந்துடன் களப்பால் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எத்தனை வருடங்களாக நடத்துனராக பணியாற்றி வருகிறேன் என்றால் 2013 ம் ஆண்டில் இருந்து நடத்துனராக பணியாற்றி வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். தேதி, மாதம் ஆகியவை எனக்கு நன்றாக தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது பேருந்து வந்துகொண்டிருக்கும்போது எதிரி மறைத்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். புகாரில் நான் கூறியுள்ளவாறு பேருந்து நிறுத்ததில் பயணிகளை இறக்கி விடும்போது தான் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் நடந்தது என்றால் சரிதான்.

நடந்ததாக சொல்லப்படும் சம்பத்தின் போது எதிரி எங்களது பேருந்தினை மறைத்ததாக சொல்லப்படும் இடம் வேறு. என்னை தாக்கியதாக சொல்லப்படும் இடம் வேறு என்றால் சரிதான். மேற்படி சங்கதியை நா்ன போலீசார் வா்ககுமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் எதிரி எந்த வகையான இருச்சக்கர வாகனத்தில் வந்தார் பதிவெண் எண் குறிப்பிட்டு புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். இருட்டாக இருந்ததால் தெரியவில்லை.

எதிரி என்னை தாக்கியதாக சொல்லப்படும் இடம் வெங்கத்தான்குடி பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். அதனை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்றையதினம் எதிரியும், அவரது நண்பரும் பாலத்தில் வரும்போது எங்களது பேருந்தின் ஓட்டுநர் கவனக்குறைவாக பேருந்தை இயக்கி அதன் விளைவாக எதிரியும், அவரது நண்பரும் கீழே விழுந்து காயம் ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றையதினம் எதிரி அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் சரியல்ல.

எங்களது பேருந்து ஓட்டுநரின் செயலை மறைக்க எதிரிகள் மீது ஒரு பொயயான புகார் கொடுக்க வேண்டும் என்று யோசனை செய்துகாலதாமதாக கொடுத்த புகாரின் பேரில் தவறாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அன்றையதினம் என்னை யாரும் தாக்கவில்லை என்றாலும், அதனால் உடனடியாக மருத்துவமனை செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அன்றையதினம் மருத்துவமனை ஏன் செல்லவில்லை என்றால் இரவு அன்றைய பணியை முடித்து விட்டு மறுநாள் தான் வீட்டிற்கு சென்றேன். அன்றையதினம் முழுவதும் பணியில் இருந்த விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் அது பற்றி கூறவில்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.